**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS. 79/2016. நாள்.12.02.2025**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அன்பு | **வயது** | 38 |
| **த/பெ. க/பெ.** | சின்னசாமி | **மதம்** | |
| **முகவரி** | ஜிங்கல்கதிராம்பட்டி | **தொழில்** | விவசாயம் |

**<u>வா.சா.1 ஆஜர். 1 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. 07.07.2003 ஆம் தேதி எனக்கும், தங்கராஜ், வெங்கடேஷ் ஆகியோருக்கு சொத்துக்களை பிரித்து தானமாக கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மீதி உள்ள சொத்தை ஜீவனத்திற்க்காக எனது தகப்பனார் அனுபவித்து வந்தார் என்று சொன்னால் நானும், எனது சகோதரர்களும், சகோதரிகள் மட்டும் தான் அனுபவித்து வந்தோம். எங்களுக்கு எழுதி கொடுத்துள்ள சொத்துக்களை தவிர மீதி சொத்துக்களை எனது தகப்பனார் அனுபவித்து வந்தார் என்றும், அதை மறைத்து நான் வழக்கிற்க்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் தானம் எழுதி கொடுத்த சொத்துக்களை தவிர இதர சொத்துக்களை அனுபவித்து வந்ததில் அதில் 40 சென்ட் நிலத்தை 23.07.2010 ஆம் தேதி போச்சம்பள்ளி சார்பதிவகத்தில் 1-ம் பிரதிவாதி ஆவண எண்.2889/2010 படி கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்குள் பாகம் எதுவும் ஏற்ப்படவில்லை.

2. எனக்கு ஓரளவிற்க்கு எழுத படிக்க தெரியும். மேற்படி ஆவணத்தில் வாய்மொழி பாகம் ஏற்ப்பட்டு எனது 3 மகன்களுக்கு பிரித்து கொடுத்தது போக மீதமுள்ள சொத்தில் 40 சென்ட் நிலத்தை அவரது தந்தை ஈம சடங்கு கடனுக்காகவும், குடும்ப அவசர கடனுக்காகவும் ரூ.30,000/-ற்க்கு, சர்வே எண்.417/4-ல் 26 சென்ட் நிலமும், சர்வே எண்.416/16-ல் 14 சென்ட் நிலமும், மொத்தம் 40 சென்ட் நிலத்தை 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து அனுபவம் ஒப்படைத்துள்ளார் என்று சொன்னால் அதுப்போல் எவ்வித ஆவணமும் ஏற்ப்படவில்லை. அது தவறானதாகும். மேற்படி கிரைய பத்திரத்தில் அன்பு வகையறா நிலத்திற்க்கு தெற்கு மற்றும் வடக்கு, சீனன்,

மாது, அபிமன்னன் நிலத்திற்க்கு மேற்கு, (1–ம் பிரதிவாதி) ரவிச்சந்திரன் நிலத்திற்க்கு கிழக்கு இதன் மத்தியில் 40 சென்ட் நிலம் என 2 சர்வே எண்களுக்கும், ஒரே ஜக்குபந்தி குறிப்பிட்டு எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது தவறானதாகும்.

3. 11.01.2018 ஆம் தேதி இவ்வழக்கில் ஒரு தலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதை ரத்து செய்ய 1–ம்பிரதிவாதி மனுதாக்கல் செய்து மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டு 05.02.2020 ஆம் தேதி ஒரு தலைப்பட்ச தீர்ப்பு ரத்து செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். 25.08.2020 ஆம் தேதி வாதிகளாகிய நாங்களும் மற்றும் 5, 6 பிரதிவாதிகளும் வழக்கு சொத்தை பொருத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் உருவாக்கியுள்ளோம் என்று சொன்னால் சரிதான். 25.08.2020 ஆம் தேதிய தானப்பத்திரம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளாகிய நாங்களும், 5,6 பிரதிவாதிகளும் சேர்ந்து 02.09.2022 ஆம் தேதி மோசடியாக தாவா சொத்தை உள்ளடக்கி பாகப்பிரிவினை ஆவணம் உருவாக்கியுள்ளோம் என்று சொன்னால் இருக்கிற நிலத்தை நாங்கள் பிரித்து கொண்டோம்.

4. இந்த வழக்கை நாங்கள் தான் தாக்கல் செய்தோம். இந்த வழக்கில் 1–ம் பிரதிவாதி பெயரில் கிரைய பத்திரம் செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளோம். 1,4 பிரதிவாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கோடு வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்தை உள்ளடக்கி பாகப்பிரிவினை ஆவணம் உருவாக்கியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு பாகமாக பிரித்து கொடுத்துள்ள நிலம் போக மீதமுள்ள சொத்தை எனது தந்தை அனுபவித்து வந்தார் என்றும், அதில் 40 சென்ட் நிலத்தினை 1–ம்பிரதிவாதிக்கு விற்பனை செய்த விவரம் எங்களுக்கு தெரியும் என்றும், அதை மறைத்து வழக்கிற்க்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 4–ம் பிரதிவாதி தானப்பத்திரத்தையும் மற்றும் பாகப்பிரிவினை பத்திரத்தையும் ரத்து செய்ய தனியாக அசல் வழக்கு எண். 83/2022 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் வாதிகள் மற்றும் 5,6 பிரதிவாதிகள் தரப்பினாராக உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான்.

5. தாவா பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாவா சொத்தை 1–ம் பிரதிவாதி 4–ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து

சொத்தின் அனுபவத்தையும் ஒப்படைத்துவிட்டார் என்று வழக்கு சொத்தானது அவரது உரிமைகளும், ஆளுகையிலும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் 40 சென்ட் நிலத்தை தவிர எனது தகப்பனார் அனுபவித்த சொத்தை தற்போது நாங்கள் அனைவரும் சேர்ந்து அனுபவத்து வருகிறோம் என்று சொன்னால் அனைத்து சொத்தையும் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். வழக்கில் அ, ஆ,இ– அட்டவணை சொத்துக்களில் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மட்டும் வழக்கில் சேர்த்து வழக்கை தாக்கல் செய்துள்ளோமா என்றால், அனைத்து சொத்துக்களையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம். சரியான சொத்து விவரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்யாத காரணத்தால் வழக்கு தள்ளுப்படி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN
Distirct Munsif cum Judicial Magaistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.